DEPOSITON OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

Assistant Sessions Judge, Sankari

IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | | |
|---|---|---|
| Calender | } | |
| Miscellaneous | } | |
| Preliminary Register | } | |
| Sessions | } | Case No.SC.171/2019 |

| | | |
|---|---|---|
| Deposition of Witness | { | PW13 |
| | { | Prosecution |
| | { | |

| | |
|---|---|
| Name | : ராமசந்திரன் |
| Father's Name | : --- |
| Taluk | : --- |
| Calling | :--- |
| Religion | :--- |
| Age | :--- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.02.2025.

2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.13 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

முதல் விசாரணை

நான் வைகுந்தத்தில் குடியிருக்கிறேன். நான் காப்பி கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1 யை தெரியும். அவரது அப்பா சடையன் என்பவரை எனக்கு தெரியும். சுமார் 20 வருடங்களுக்கு முன்பு மகுடஞ்சாவடியில் பத்திர

எழுத்தர் தொழில் செய்யும் ரங்கநாதன் என்பவரது அலுவலகத்திற்கு நண்பரின் ஆவணம் எழுதி பதிவு செய்வதற்காக நான் சென்றிருந்தேன். அப்போது எனக்கு தெரிந்த சடையன் அங்கிருந்தார். அவர் தன்னுடைய மகனுக்கு உயில் சாசனம் எழுதி வைப்பதாகவும் அதில் சாட்சி கையெழுத்து செய்ய வேண்டும் என்றும் கேட்டார். நான் அதற்கு ஒப்பு கொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 வரிசை எண்.3 வது ஆவணமான தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் இரண்டாவதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்தை யார் கேட்டு கொண்டதால் செய்தேன் என்றால் சடையனும் முருகேசனும் கேட்டார்கள். நான் அன்றைய தினமும் தற்செயலாக மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகம் சென்றிருந்தேன். அப்போது சடையனும் முருகேசனும் கேட்டதால் சாட்சி கையெழுத்து செய்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் ஒருமுறை தான் சடையன் முருகேசன் ஆகியோர்களுக்காக பத்திர அலுவலகம் சென்று சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அப்போது தான் சடையன் முருகேசனுக்கு உயில் எழுதி வைக்க இருப்பதாக அவர் சொல்லி எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். அதன் பிறகு எனக்கு நான் சாட்சி கையொப்பம் செய்த ஆவணம் சம்பந்தமாகவோ, அல்லது இந்த சொத்துக்கள் சம்பந்தமாகவோ எனக்கு எதுவும் தெரியாது. சடையனும் முருகேசனும் பின்னிட்டு அதுபற்றி என்னிடம் எதுவும் சொல்லவில்லை.

மற்ற எதிரிகள் 1 ம் எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.

Sd/-ராமசந்திரன்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி